SRI SANKARA ARTS AND SCIENCE COLLEGE
Autonomous
A Unit of Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust
and Affiliated to University of Madras / Accredited by NAAC with 'A' Grade

ENATHUR, KANCHIPURAM - 631 561.
Phone : 044-27264066
Mail : admin@sankaracollege.edu.in
Website : www.sankaracollege.edu.in

11/07/2019

# MINUTES OF MEETING OF THE BOARD OF STUDIES

**Department:** Tamil

**Venue:** Board Room

**Date:** JULY 11th, 2019

**Agenda:** Approval of Value added courses and evaluation techniques and other academic activities in the department.

**The following members were present in the meeting:**

1. Dr. J. RADHAKRISHNAN, Assistant Professor & Head, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Chairman
2. Dr. G. JAYASHREE, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
3. Dr. G. ANITHA, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
4. Dr. T.S. JEYALAKSHMI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
5. Dr. S. SIVAGAMASUNDARI, Assistant Professor, Department of Tamil, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram – Member
6. Dr. K.R. VENKATESAN, Principal, Sri Sankara Arts & Science College, Enathur, Kanchipuram - Special invitee

**The following members could not attend the meeting due to their prior commitments and were granted leave of absence:**

1. **Nil**

முந்தைய பாடத்திட்டக்குழுக் கூட்டங்களின் *(12.07.2018, 09.01.2017, 05.02.2019)* பரிந்துரைகளின் படி பின்வரும் நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன.

*1.* திருவையாறு, அரசர் கல்லூரி பேராசிரியர் முனைவர் **சு. திருஞானசம்பந்தம்** *(16.08.2018)*, புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மைய பிரஞ்சுத்துறை பேராசிரியர் முனைவர் **சு.ஆ. வெங்கடசுப்புராயநாயகர்** *(21.01.2019)*, வைணவ உரையாசிரியர் கலைமாமணி முனைவர் **இரா.வ. கமலக்கண்ணன்** *(24.01.2019)*, சாகித்ய அகாதமி தேர்வுக்குழு உறுப்பினர் பேராசிரியர் முனைவர் **க. பஞ்சாங்கம்** *(05.03.2019)*, பிரான்ஸ் வாழும் தமிழ் எழுத்தாளர் **நாகரத்தினம் கிருஷ்ணா** *(05.03.2019)*, காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் **க. உமாசங்கர்** ஆகியோரைச் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து **புலம்பெயர் இலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம், பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள், மரபு தொழில்நுட்பங்கள்** குறித்த உரைகள் நிகழ்த்தப்பெற்றன.

*2.* மாணவரிடையே பிழையின்றித் தமிழ் எழுதுவதும், இலகுவாக மொழியைப் பயன்படுத்துவதும் ஆகிய மொழிப் பயிற்சியை வழங்கும் நோக்கத்துடன் சென்னை, தரமணி, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ***30.08.2018*** அன்று, அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான ஒருநாள் **மொழிவளப் பயிலரங்கம்** நடத்தப்பெற்றது. இதில் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் **கோ. விசயராகவன்**, சென்னப்பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் **ஒப்பிலா.மதிவாணன்**, பச்சையப்பன் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் **மு. ஞானத்தாய்** உள்ளிட்டோர் வல்லுநர்களாகக் கலந்துகொண்டு பயிற்சிகள் வழங்கினர்.

*3.* மலேசியா, மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை, மலேசியா, உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், யாழ்ப்பாணம், விருபா தமிழ்ப் புத்தக தகவல்திரட்டு இணையதளம், வல்லமை - ஆய்வு மின்னிதழ், தி இந்து தமிழ் திசை நாளிதழ் ஆகியவற்றுடன் இணைந்து ***26.10.2018*** அன்று **நதிகளும் தமிழ்ச் சமுதாயமும்** என்ற நீர் மேலாண்மை குறித்த பன்னாட்டு ஆய்வு மாநாடு நடத்தப்பெற்றது. இம்மாநாட்டில் பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா,

சிங்கப்பூர், மலேசியா முதலான நாடுகளிலிருந்தும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகைதந்த *325* பேராளர்கள் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கினர். அவர்களின் *323* கட்டுரைகளும் *1904* பக்கங்களில் **நதிகளும் தமிழ்ச் சமுதாயமும்** ***(ISBN:978-81-939345-0-0)***, **தமிழ்நதி *(ISBN: 978-81-938808-05-2)***, **நதிகள் தந்த நாகரிகம் *(ISBN:978-81-938808-4-5)*** ஆகிய மூன்று தொகுதிகளாக வெளியிடப்பெற்றன.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கை ஒட்டி, கண்காட்சியும், படைப்பாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்ட நீர்மேலாண்மை குறித்த பன்னாட்டுப் படைப்பரங்கமும் நடைபெற்றது. ஐநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இப்படைப்பரங்கில் தேர்வுபெற்ற படைப்புகள் **நீரின்றி அமையாது உலகு *(ISBN: 978-81-939345-1-7)*** எனும் தலைப்பில் தனியாகத் தொகுக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.

4. மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் நோக்கில் இந்து தமிழ்திசை நாளிதழுடன் இணைந்து பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் முறையே ***23.03.2019*** முதல் ***26.03.2019*** வரையிலான நாள்களில் நடத்தப்பெற்றன. ஒட்டுமொத்தமாக அனைத்து துறைகளிலிருந்தும் *140* மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்களுள் வெற்றிபெற்றவர்களுக்கு ***08.04.2019*** அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இந்து தமிழ் திசை நாளிதழ் சென்னை மண்டல முதுநிலை துணை மேலாளர், திரு. **வெ. ரத்தினகண்ணன்** கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார். மேலும் மாணவர்களிடையே நாளிதழ் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கும் விதத்தில் போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் *27.03.2019* முதல் *20* நாட்களுக்கு கல்லூரி வழியாகவே இந்து தமிழ் திசை நாளிதழ்கள் அந்நிறுவனத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன. இது மாணவர்களின் படைப்பாற்றல் வளர்ச்சியுடன் பொது அறிவு மேம்பாட்டிற்கும் ஊடகத்துறை அனுபவத்திற்கும் பெரிதும் உதவியது.

*5.* கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று ஆய்வு மையத்துடன் *(KIRUNAGIRI DISTRICT HISTORICAL RESEARCH CENTER)* இணைந்து கல்வெட்டியல் *(EPIGRAPHY)* சான்றிதழ்ப் படிப்பு ***02.02.2019*** முதலும், சென்னை, மதுரா டிராவல் சர்வீஸ் பிரைவேட் லிமிட்டெட் *(MADURA TRAVEL SERVICE (P) LTD)* நிறுவனத்துடன் இணைந்து சுற்றுலாவியல் சான்றிதழ் படிப்பு ***11.02.2019*** முதலும், டாக்டர் உவே. சாமிநாதையர் நூல் நிலையத்துடன் *(DR. U. VE. SAMINATHIYAR LIBRARY)* இணைந்து சுவடியியல் *(MANUSCRIPTOLOGY)* சான்றிதழ்ப் படிப்பு *19.02.2019* முதலும் தொடங்கப்பெற்றன. இவ்வகுப்புகளை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் **இ. சுந்தரமூர்த்தி**, சென்னைப் பல்கலைக் கழக தமிழ் மொழித்துறைத்தலைவர் முனைவர் **ய. மணிகண்டன்**, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித் துறைத் தலைவர் முனைவர் **மோ.கோ. கோவைமணி**, செம்மொழி தமிழாய்வு

மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் **கி. ஜெயக்குமார்**, கலைமாமணி **வீ.கே.டி. பாலன்**, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலைய காப்பாட்சியர் முனைவர் **கோ. உத்திராடம்**, தமிழ்நாடு தொல்லியல் துறை மேனாள் தொல்லியல் அலுவலர் திரு. **ச. கிருஷ்ணமூர்த்தி**, குப்புசாமி சாஸ்திரி சம்ஸ்கிருத நூலக நூலகர் திருமதி **ஜெ. லலிதா**, கல்வெட்டு ஆய்வாளர்கள் காவேரிபட்டினம் **சுகவனம் முருகன்**, விழுப்புரம் **சி. வீரராகவன்**, கோவை **துரை. சுந்தரம்**, முனைவர் **துளசி. மாலா**, முனைவர் **சத்யா சுரேஷ்** ஆகிய வல்லுநர்கள் நேரில் கலந்துகொண்டு நடத்திக் கொடுத்தனர். இவற்றில் ஒட்டுமொத்தமாக *227* மாணவர்கள் பங்குபெற்றுப் பயன்பெற்றனர். இச்சான்றிதழ்ப் படிப்புகளுக்காக உருவாக்கப்பெற்ற பாடத்திட்டங்களும் குழு முன்பு சமர்ப்பிக்கப்பெற்று ஒப்புதலும் பாராட்டும் பெறப்பெற்றன.

தொடர்ந்து, பின்வரும் பரிந்துரைகளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பெற்றன.

- *2018-19* கல்வியாண்டில் நடைமுறைக்கு வந்த பாடத்திட்டத்தின் மூன்று மற்றும் நான்காம் பருவ மொழிப்பாடத்திட்டத்தில் எண்ணிக்கை கொடுக்கப்பட்டு, வரையறுக்கப்படாமல் இருந்த பாடல்கள் இக்குழு ஆலோசனையின் பேரில் வரையறுக்கப்பெற்று உரிய பாடல் எண்கள் வழங்கப்பெற்று உடனடியாக நடைமுறைப்படுத்த பரிந்துரைக்கப்பெற்றன.

  The board advised to serialized the poems prescribed in the third and fourth semester language syllabus.

- உரிய மொழிப்பாட நூல்கள் கல்லூரியாலேயே தயாரிக்கப்பெற்று வழங்கவும் பரிந்துரைக்கப்பெற்றன.

  *Board suggested to prepare General Tamil text book as early as possible to issue to the students*

- இளங்கலை இரண்டாம் ஆண்டு மூன்றாம் பருவத்தில் உள்ள காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் பாடத்திற்கு உரிய பாடல்களும் அலகுகளுக்கு ஏற்ப எண்ணிக்கையும் எண்களும் இறுதிசெய்து நடைமுறைப்படுத்த பரிந்துரைக்கப்பெற்றன.

  *Board recommended proper serializing and regulating the units of syllabus for the third semester subjects such as epics and literature of the second year students.*

- முதுகலை மாணவர்கள் சிற்றிலக்கியப் பாடத்திற்கு உரிய 'நந்திக் கலம்பகம்' குறித்து பன்முக நோக்கிலான ஆய்வுகளை முன்னிறுத்தும் வகையில் கருத்தரங்கம் நடத்த கருத்துரை வழங்கப்பட்டது

  *Board suggested to conduct conference for encouraging multi-dimentional researches in 'Nandhi Kalambagam'.*

- பாடம் தொடர்பான செயல்வழி அகமதிப்பீட்டுத்தேர்வுகள் மூலம் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்க ஆலோசனை வழங்கப்பெற்றது. குறிப்பாக, இலக்கிய வரலாறு, தமிழக வரலாறும் பண்பாடும், இதழியல், நாட்டுப்புறவியல், கோயிற்கலை, பக்தி இலக்கியம், காப்பியங்கள் போன்ற பாடங்கள் செயல்வழி அகமதிப்பீட்டுத்தேர்வுகளுக்குப் பரிந்துரைக்கப் பெற்றன

  *Board recommended conducting projects for internal exams in certain subjects like History of Literature, Tamil History and Culture, Journalism, Folklores, KovilKalai, Bakthi Ilakkiyam and Epics.*

- ஓரிரு அகமதிப்பீட்டுத் தேர்வுகள் இணையவழியாகவும் நடத்த பரிந்துரைக்கப்பெற்றது.

  *Board adviced to conduct the Internal exams thorugh online mode.*

- தமிழ் இலக்கியங்கள் வழி சுற்றுசூழல் விழிப்புணர்வு தொடர்பான ஆய்வு மாநாடு, கண்காட்சி நடத்துவது தொடர்பாக உயரிய கருத்துரைகள் பகிர்ந்துகொள்ளப்பெற்றன.

  *Board suggested to conduct research seminars, exhibitions in Tamil Literatures that promote awareness of environmental safety and preservation.*

- தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் இணைந்து கணித்தமிழ்ப் பேரவை அமைத்து அதன் மூலம் மாணவர்களுக்கு கணினியில் தமிழ் மொழியின் செல்வாக்கு மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் போட்டிகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தவும் தக்க ஆலோசனைகள் பெறப்பெற்றன.

  *Board recommended to create a **kanithamizh peravai** (computer-tamil forum) in cooperation with **Tamil Virtual Academy** and gave counselling regarding the conduct of workshops, conferences, seminars in relation to the scope of tamil in computer-based learning.*

**Signature of Members:**

1. Dr. J. RADHAKRISHNAN 11/07/2019

2. Dr. G. JAYASHREE 11/7/19

3. Dr.G. ANITHA 11/7/19

4. Dr. T.S. JEYALAKSHMI 11/7/19

5. Dr. S. SIVAGAMASUNDARI 11/07/2019

6. Prof. Dr. K.R. VENKATESAN 11/7/19.